பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

01 09 2026 TUESDAY 6 45

## <u>தலைப்புச் செய்திகள்</u>

1. இந்தியா-ரஷ்யா இடையே பல்வேறு துறைகளில், இருதரப்பு ஒத்துழைப்பு குறித்து ரஷ்ய அதிபர் திரு.விளாடிமிர் புடினுடன் பிரதமர் திரு. நரேந்திர மோடி பேச்சு நடத்தினார்.
2. நிதி மோசடிகளில் ஈடுபட்டு வரும் செயலிகள் தொடர்பாக மக்கள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டுமென்று உள்துறை அமைச்சகம் அறிவுறுத்தியுள்ளது.
3. நாட்டை தொழில்நுட்ப மற்றும் புத்தொழில் நிறுவனங்களுக்கான உலகளாவிய மையமாக திகழ செய்வதற்கு தொழில்துறை கல்வித்துறை இடையே வலுவான ஒத்துழைப்பு அவசியம் என்று குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி.ராதாகிருஷ்ணன் வலியுறுத்தியுள்ளார்.
4. மேட்டூர் அணையிலிருந்து பாசனத்திற்காக தண்ணீரை முதலமைச்சர் திரு.விஜய் இன்று திறந்துவிடுகிறார்.
5. செக்குடியரசில் நடைபெற்ற சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Ankur Bhattacharjee பட்டம் வென்றார்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

ஷாங்காய் ஒத்துழைப்பு உச்சிமாநாட்டில் கலந்துகொள்வதற்காக கிர்கிஸ்தான் சென்றுள்ள பிரதமர் திரு. நரேந்திர மோடி, நேற்று ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடினை சந்தித்து பேச்சு நடத்தினார்.

Bishkek-ல் நடைபெற்ற இந்தச் சந்திப்பின் போது, வர்த்தகம் மற்றும் முதலீடு, எரிசக்தி மற்றும் பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு துறைகளில், இருதரப்பு ஒத்துழைப்பு குறித்து, தலைவர்கள் விவாதித்தனர்.

அப்போது பேசிய பிரதமர், இந்தியா-ரஷ்யா இடையேயான ஒத்துழைப்பு தொடர்ந்து, வளர்ச்சியடைந்து வருவது திருப்தி அளிப்பதாக கூறினார்.

ரஷ்யா-உக்ரைன் மோதல் குறித்து குறிப்பிட்ட அவர், இதற்கு அமைதியான முறையில் தீர்வு காண்பதன் அவசியம் குறித்து வலியுறுத்தினார்.

நாள்தோறும் நடைபெறும் போர் மனித சமூகத்தை பின்னுக்கு தள்ளிவிடும் என்று குறிப்பிட்டார்.

அனைத்து விவகாரங்களுக்கும் அமைதியான முறையில் தீர்வுகாண்பது என்பது மனித நேயத்துக்கு அழைப்பு விடுப்பது என்பதாகும் என்று அவர் தெரிவித்தார்.

<<<<>>>>

போரை முடிவுக்கு கொண்டுவர வேண்டும் என்பதை நோக்கிய முயற்சியில் ஈடுபட வேண்டுமென்றும் இதற்கு இந்தியா ஆதரவு அளிப்பதாகவும் பிரதமர் கூறினார்.

இந்தியாவில் இன்னும் சில நாட்களில் பிரிக்ஸ் உச்சிமாநாடு நடைபெற உள்ள நிலையில், திரு.புடினையும் அவரது பிரதிநிதிகளையும் வரவேற்க இந்தியர்கள் அனைவரும் ஆவலுடன் இருப்பதாக அவர் தெரிவித்தார்.

ரஷ்ய அதிபரின் வருகை இருதரப்பு உறவை வலுப்படுத்தும் என்று பிரதமர் கூறினார்.

இதற்கிடையே, ரஷ்ய அதிபர் திரு. புடினுடன் தாம் விரிவாக விவாதித்ததாகவும் இருநாடுகளுக்கிடையேயான கூட்டாண்மையின் முக்கிய அம்சங்கள் குறித்து ஆலோசித்ததாகவும் பிரதமர் சமூக வலைதளத்தில் குறிப்பிட்டுள்ளார்.

எரிசக்தி, புதுமை கண்டுபிடிப்பு, விண்வெளி, உரங்கள், மக்களுக்கிடையேயான தொடர்பு ஆகியவற்றில் இருநாடுகளும் முக்கிய கவனம் செலுத்துவதாக பிரதமர் கூறியுள்ளார்.

<<<<>>>>

ஆபாச செயலிகள் போல் செயல்பட்டு நிதி மோசடிகளில் ஈடுபட்டு வரும் செயலிகள் தொடர்பாக மக்கள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டுமென்று உள்துறை அமைச்சகம் அறிவுறுத்தியுள்ளது.

இந்த செயலிகள் முகநூல், இன்ஸ்டாகிராம் ஆகியவற்றில் விமோ, ரீவோ, நெக்சோ உள்ளிட்ட பல்வேறு பெயர்களில் விளம்பரங்கள் மூலம் பரப்படுவதாக கூறியுள்ளது.

எனவே விளம்பரங்கள், இணையதளங்கள் அல்லது சந்தேகத்திற்கு உரிய இணைப்புகள் வாயிலாக ஏபிகே கோப்புகளை பதிவிறக்கம் செய்யவேண்டாம் என்று கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது அத்துடன் தெரியாத செயலிகளுக்கு அனுகல் அனுமதி அளிக்க வேண்டாமென்று அறிவுறுத்தியுள்ளது.

மேலும், கூகுள் ப்ளே ஸ்டோர் அல்லது இதர நம்பத்தகுந்த செயலி அமைப்புகளிலிருந்து மட்டுமே செயலிகளை பதிவிறக்கம் செய்யுமாறும் உள்துறை அமைச்சகம் மக்களை அறிவுறுத்தியுள்ளது.

<<<<>>>>

காவிரி டெல்டா பாசனம் மற்றும் குடிநீர் தேவைகளுக்காக சேலம் மாவட்டம் மேட்டூர் அணையிலிருந்து இன்று முதல் 45 நாட்களுக்கு தண்ணீர் திறந்துவிடப்படுகிறது.

முதலமைச்சர் திரு. விஜய், அணையிலிருந்து தண்ணீரை திறந்து வைக்கிறார்.

அணையின் நீர்மட்டம் அதிகரித்துள்ளதையடுத்து தண்ணீர் திறந்துவிடப்பட உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

நடப்பு நிதியாண்டின் முதல் காலாண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தி 7 புள்ளி எட்டு சதவீதத்தை எட்டியிருப்பது வரலாற்று சாதனையாகும் என்று பிஜேபி மாநிலத்தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

இதுகுறித்து, சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், சர்வதேச அளவில் நிலவும் அரசியல் குழப்பங்கள், எண்ணெய் விலை உயர்வு ஆகிய சவால்களுக்கு இடையே பிரதமர் திரு. நரேந்திர மோடியின் ராஜதந்திர நடவடிக்கைகளும் 140 கோடி மக்களின் கூட்டு முயற்சியும்

இந்த சவால்களை முறியடித்து நாட்டை அசுரவேகத்தில் வளர்ச்சி பாதையில் அழைத்து சென்றுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இது ஒவ்வொரு இந்தியரும் பெருமை கொள்ளத்தக்கது என்று திரு. நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

<<<<>>>>

நாட்டை தொழில்நுட்ப மற்றும் புத்தொழில் நிறுவனங்களுக்கான உலகளாவிய மையமாக திகழ செய்வதற்கு தொழில்துறை கல்வித்துறை இடையே வலுவான ஒத்துழைப்பு அவசியம் என்று குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி.ராதாகிருஷ்ணன் வலியுறுத்தியுள்ளார்.

கொச்சியில் நடைபெற்ற பொறியியல் தொழில்நுட்பக் கல்லூரியின் வெள்ளிவிழா நிகழ்ச்சியில் கலந்துகொண்டு அவர் பேசினார்.

பட்டதாரிகளை உருவாக்குவதை மட்டும் நோக்கமாக கொள்ளாமல் சந்தையின் தேவைகளை புரிந்து, ஆராய்ச்சி, புத்தாக்கம் ஆகியவற்றிற்கு அதிக முக்கியத்துவம் அளிக்க வேண்டுமென்று அவர் கேட்டுக்கொண்டார்.

கற்பித்தலில் புதுமை, பல்துறை ஆராய்ச்சி, செயற்கை நுண்ணறிவை தொழில்நுட்பத்தை பொறுப்புடன் பயன்படுத்துதல், சர்வதேச ஒத்துழைப்பு உள்ளிட்டவை குறித்தும் திரு. சி.பி.ராதாகிருஷ்ணன் வலியுறுத்தினார்.

<<<<>>>>

தமிழகத்தில் சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர், ராணிப்பேட்டை, திருவண்ணாமலை, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, கடலூர், திருச்சி, பெரம்பலூர், அரியலூர், நாமக்கல் மற்றும் சேலம் மவாட்டங்களின் சில பகுதிகளில் இன்று லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் மிதமான மழை பெய்யக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

<<<<>>>>

காங்கோ நாட்டில் எபோலா வைரஸ் தொற்று காரணமாக தற்போது 6 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

-------

நேபாளத்தில் நிகழ்ந்த பெருவெள்ளத்தில் சிக்கி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 939 ஆக அதிகரித்துள்ளது.

---------

இந்திய கடற்படை கப்பல் நிபுன் மும்பையில் நடைபெற்ற விழாவின்போது கடற்படையில் இணைக்கப்பட்டது.

------------

உத்தரப்பிரதேச மாநிலம் கவுசாம்பியில் பட்டாசு தொழிற்சாலையில் ஏற்பட்ட வெடிவிபத்தில் 11 பேர் உயிரிழந்தனர். 5 பேர் காயமடைந்தனர்.

-------------

திருப்பத்தூரில் நடைபெற்ற மக்கள் குறைதீர்ப்பு நாள் கூட்டத்தில் பெறப்பட்ட 551 கோரிக்கை மனுக்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அலுவலர்களுக்கு ஆட்சியர் திரு.ரவிக்குமார் அறிவுறுத்தினார்.

---------

நெல்லை அருள்மிகு நெல்லையப்பர் அருள்தரும் காந்திமதியம்பாள் திருக்கோயிலில் இன்று முதல் கைப்பேசி பயன்படுத்துவதற்கு தடைவிதிக்கப்படுதாக கோவில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

-----------

ராணிப்பேட்டை மாவட்டத்தில் பொதுவிநியோக திட்டத்தின் செயல்பாடுகள் குறித்த வாராந்திர ஆய்வு கூட்டம் ஆட்சியர் பிரியா ரவிச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது.

------------

காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர் கூட்டத்தில் ஆட்சியர் திருமதி. சினேகா மாற்றுதிறனாளிகளிடம் மனுக்களை பெற்றுக்கொண்டு குறைகளை கேட்டறிந்தார்.

----------

சென்னை எழும்பூர்-கொல்லம் இடையே இயக்கப்படும் அனந்தபுரி அதிவிரைவு ரயில் நாளை முதல் பென்னாடத்தில் நின்று செல்லும் என்று தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

---------

சென்னையில் தேசிய நெடுஞ்சாலையில் அங்கீகரிக்கப்படாத பகுதிகளில் நிறுத்தப்பட்டிருந்த சுமார் 350 வாகனங்களை இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணைய நிர்வாகம் அகற்றியது.

<<<<>>>>

செக்குடியரசில் நடைபெற்ற சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Ankur Bhattacharjee பட்டம் வென்றார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதி ஆட்டத்தில் அவர் 9-11, 11-4, 11-5, 11-6 என்ற செட் கணக்கில் ஸ்லோவேனியாவின் Deni Kozul-ஐ வென்றார்.

-------

யுனிவெர்சல் ஜம்ப் ரோப் சாம்பியன் போட்டியின் கலப்பு பிரிவில் இந்தியா தங்கப்பதக்கம் வென்றது.

சீனாவில் நடைபெற்ற போட்டியில் ஜொராவர் சிங், பூஜா ஆர்யா, யாஷ், மோகித் ஆகியோரை கொண்ட குழு இப்பதக்கத்தை கைப்பற்றியது.

இந்தியா இப்போட்டியில் 25 தங்கம், 12 வெள்ளி, 5 வெண்கலப் பதக்கங்களை வென்றது.

<<<<<<END>>>>>>